

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.2.2024) முகாம் அலுவலகத்தில், ஓய்வு பெற்ற காவல்துறை முன்னாள் தலைமை இயக்குநர் வால்டர் ஐ. தேவாரம் சந்தித்து, நாளை வெளியிடப்படவுள்ள தான் எழுதிய ”மூணாறிலிருந்து மெரினா வரை தமிழ் மற்றும் ஆங்கில புத்தகங்களை வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

## 172 அ வட்டக் கழகக் கூட்டம்!

சென்னை, பிப். 25 -

சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, பகுதிச செயலாளர் இரா.துரைராஜ் வழிகாட்டுதலின்படி, சைதை கிழக்கு பகுதி 172 அ வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நேற்று (25. 2.2024 - ஞாயிறு) காலை 10 மணிக்கு நேருநகரில் உள்ள வட்டக் கழக அலுவலகத்தில் வட்ட அவைத் தலைவர் த.கோ. வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகக் கூட்டத் தீர்மானம், முதல்வர் பிறந்த நாள் விழா கு றித்து ஆலோசிக்கப்பட்டது.

இதில் வட்டத்திற்குட்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், சார்பு மன்றச் செயலாளர்கள், பி.எல்.ஏ. உறுப்பினர்கள் கலந்துகொண்டனர் என்று வட்டச் செயலாளர் எஸ். ஆர். செந்தில் தெரிவித்துள்ளார்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக வர இருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலில் பிரச்சாரத்தை தொடங்கும் விதமாக தமிழகத்தின் நடைபெற்றுக் கொண்டிருக்க கூடிய திராவிடமடல் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் தெற்கு மாவட்ட மலைக்கோட்டை பகுதி ஷோபிஸ் கார்னர் பகுதியில் பிரச்சார வாகனத்தை தெற்கு மாவட்ட கழக செயலாளர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், பகுதி கழக செயலாளர் மோகன் மற்றும் மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



நீலகிரி மாவட்டம், கிண்ணக்கொரை கிராமத்தில், தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை சார்பில் அங்கக முறையில் தேயிலை சாகுபடி திட்டத்தின்கீழ், கிண்ணக்கொரை இயற்கை விவசாய உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கு ரூ.1.38 இலட்சம் மானியத்தில் பல்வேறு விவசாய கருவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (24.02.2024) வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் திருமதி.ஷிபிலா மேரி, உதகை ஊராட்சி ஒன்றியத்தலைவர் மாயன் (எ) மாதன் உட்பட பலர் உள்ளனர்.

### இந்திய அரசியல் வானில்

# பா.ஜ.க. வீழ்ச்சி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது!

இன்னும் அறுபதிலிருந்து எழுபது நாட்களுக்குள் நடந்து முடிந்துவிடக் கூடிய இந்திய ஒன்றிய அரசுக்கான தேர்தலை கொஞ்சம் உன்னிப்பாக உற்று நோக்கினால் சிலபல உண்மைகள் பட்டவர்த்தனமாகத் தெரியும். மூன்று வாரங்களுக்கு முன்பாக, ஒட்டுமொத்த இந்துக்களுமே மிகப் பெரிய எதிர்பார்ப்புடனும், ஆவலுடனும், கவலையுடனும், ஒரே சிந்தனையுடனும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக நம்ப வைக்கப்பட்ட ராமர் கோவில் திறப்பு விழாவை மோடி செய்து வைத்தார்.

அதை ஒட்டிய ஊடக அலப்பறைகளும் தொடர் செய்திகளும் விளம்பரங்களும் அங்கே மக்கள் செல்வதுமான பல செயல்பாடுகளை பா.ஜ.க. முன்னெ டுக்க அடுத்த வாரமே ஒட்டுமொத்த இந்திய ஊடகங்களும் வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கான கருத்துக் கணிப்பை வரிசையாக வெளியிடத் துவங்கினர். அந்த வாரம் முழுக்க எந்த சேனலை திறந்தாலும், பா.ஜ.க. 350 சீட், பா.ஜ.க. 370 சீட் பா.ஜ.க. 400 சீட் என்றே கணிப்புகள் வர ஒட்டுமொத்த இந்திய மக்களும் ஓஹோ மோடி தான் திரும்பவும் வர்றாரா?! என்பது போல் எண்ணத் துவங்கிய நிலையில் உத்ராகாண்ட்டில் சி.ஏ.ஏ. சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு யார் யாரை திருமணம் செய்வது எந்தெந்த உறவுமுறைகள் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்பது வரை ஒவ்வொரு வீட்டின் பெட் ரூம் வரையிலும் அந்த சட்டம் பாய்கிறது என்ற செய்தி மெல்ல ஒட்டுமொத்த இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் பரவ மக்களும் இது என்னடா கூத்து என்று ஙேஏஏ என விழித்துக் கொண்டிருக்கும் போதே.

வடநாட்டு விவசாயிகள் கடந்த பத்தாண்டு கால மோடி ஆட்சியால் தாங்கள் பாதிக்கப்பட்டதாகச் சொல்லி டெல்லியை நோக்கி படையெடுக்க நாங்க பாகிஸ்தானோட சண்டை போடுவோம், சீனாவோடு சமாதானமாகப் போவோம் என்று (சொல்லாமல்) உதார் விட்டுக் கொண்டிருந்த மோடி அரசு கடைசியாக யாரும் சண்டைக்கு வராத காரணத்தால், தன் சொந்த நாட்டு விவசாயிகள் மீதே போர்த்தொடுக்க துவங்கி அது ஒரே ரணகளமாகி, ஒரு உயிரிழப்பு வரையிலும் சென்று இப்போ மார்ச் 14ஆம் தேதி டெல்லியில் பெரிய கண்டன மாநாடு என்பது வரை சென்றுள்ளது.

இதை விட மிக முக்கிய மாற்றமாக இத்தனை காலமும் எதிர்க்கட்சிகள் எல்லாம் சொல்லிச் சொல்லி ஊடகங்கள் அனைத்தும் கண் காது உட்பட அனைத்து துவாரங்களையும் மூடிக்கொண்டே கடந்து சென்ற உலக அளவில் மிகப் பெரிய அநியாய அயோக்கியத்தனமான அங்கீகரிக்கபட்ட ஊழலாக விளங்கிய எலக்டோரல் பாண்ட் எனப்படும் தேர்தல் பத்திர முறை கேட்டினை உச்சநீதிமன்றம் தாறுமாறாக கிழித்தெறிந்து விளக்குமாற்றில் சாணியை கரைத்து அடிப்பதாக எங்கள் பகுதியில் ஒரு சொலவடை உண்டு அதே போல் மோடி அரசை அடித்து அந்த ஊழலை தடுத்து நிறுத்தி பா.ஜ.க.வின் முகம் மிக அழுக்கான ஊழல் முகம் என்று வெளிக்காட்டியிருக்கின்றது!

அடுத்ததாக சண்டிகர் மாநகர மேயர் தேர்தலில், அப்பட்டமான மிகக் கேவலமான அயோக்கியத்தனத்தை செய்து பா.ஜ.க. தனது கட்சிக்காரரை மேயர் ஆக்கியதை உச்சநீதி மன்றம் காறி உமிழ்ந்து, அடித்து துவைத்து பா.ஜ.க.வை விரட்டிவிட்டுஆம்ஆத்மியைமேயர்ஆக்கிவிட்டிருக்கின்றது!

இப்படியாக பா.ஜ.க.வின் முகத்திரைகள் ஒரு பக்கமாக கிழிக்கப்பட்டுக் கொண்டிருக்க இன்னொரு பக்கம், இந்தியா கூட்டணி இல்லாமல் போய்விட்டது. மம்தா எட்டி உதைச் சிட்டாங்க கெஜ்ரிவால் ஒட்ட மாட்டார். அகிலேஷ் சரிப்பட்டு வரல அஷோக் சவானை தூக்கிட்டோம். நிதிஷ் குமாரை தூக்கிட்டொம்ன்னு எல்லாம் சொல்லி பா.ஜ.க. மட்டுமே தனிப்பெரும் கட்சியாக நிற்கிறது என்ற பிம்பத்தை மோடி அன் கோ உருவாக்கி வைத்திருந்த நிலையில் திடீரென, உத்தரபிரதேசத்தில் அகிலேஷ் காங்கிரஸ் கூட்டணி அறிவிக்கப்படுகிறது. டெல்லி, பஞ்சாப், ஹரியானா, குஜராத், அஸ்ஸாம், மத்திய பிரதேசம் என்று காங்கிரஸ் ஆம் ஆத்மி கூட்டணி கையெழுத்தாகிறது. இதெல்லாம் போக மம்தாவும் காங்கிரசுக்கு 5 சீட் ஒதுக்கி கூட்டணியை உறுதி செய்து விட்டார் என்று அறிவிப்புகள் வந்து.பா.ஜ.க.வை திக்கு முக்காட வைத்திருக்கின்றது.

அதாவது இந்தியா கூட்டணி வலிமையுடன் உயிர்ப் பெற்று விட்டது. பா.ஜ.க. தான் கூட்டணியை முடிவு செய்ய முடியாமல் தனியாக தவித்துக் கொண்டிருக்கின்றது என்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது! இவை அனைத்துமே இரண்டு வாரங்கள் முன்பாக ராமர் கோவில், கருத்துக்கணிப்புகள் என்ற ஆயுதங்களுடன் பா.ஜ.க. முன்னேறிக் கொண்டிருப்பதாக நம்பவைக்கப்பட்ட நிலையில், கடந்த இரண்டு வாரங்களில் இந்தியா கூட்டணிக்கு கிடைத்த வளர்ச்சிகளும் பா.ஜ.க.வுக்கு கிடைத்திருக்கும் வீழ்ச்சிகளுமாக இந்திய அரசியல் வானில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது!

இதற்கு மேல பா.ஜ.க. வசம் இருக்கும் ஒரே அஸ்திரம் என்றால் அது ஈ வி எம் எனப்படும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் தான். அந்த பிரச்சினையையும் எதிர்க்கட்சிகள் கையிலெடுத்துவிட்டன. அந்த இயந்திரங்களை தயாரிக்கும் நிறுவனத்தில் மோடியின் ஆட்கள் நான்கு பேர் இயக்குனர்



**சௌமியன் வைத்தியநாதன்**
**எழுத்தாளர்**

களாக இருக்கின்றனர் என்று உச்சநீதிமன்றமே சொல்லி விட்டது. இனி பா.ஜ.க.வின் இந்த அஸ்திரமும் கொஞ்சம் கொஞ்சமாக எதிர்க்கட்சிகளால் உச்சநீதிமன்ற உதவியுடன், முனை மழுங்க வைக்கப்படும்..!

**அதிகார போதை உச்சந்தலையில் ஏறி விட்ட நிலையில்... பாஜக மமதையோடு செய்திருக்கும் இன்னொரு காரியம் ஈடியை பயன்படுத்தி கெஜ்ரிவாலை கைது செய்யப்போவதாக நோட்டீஸ் அனுப்பியது தான். அதை அக்கட்சியே நாங்கள் இந்தியா கூட்டணியிலி ருந்து வெளியேறா விட்டால், எங்கள் தலைவரை கைது செய்வதாக ஈடி மிரட்டுவதாக அறிக்கை விட்டு இப்போ பா.ஜ.க. ஈடியை எவ்வாறெல்லாம் தங்கள் அரசியல் லாபத்திற்காக தவறாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை மக்களிடம் அம்பலப்படுத்தி விட்டது!**

இனி இந்தியாவில் ஈடி கைது ஒன்று நடந்தால் கூட... அது எதிர்க்கட்சிகளுக்கு அனுதாபத்தையும், பா.ஜ.க. மீதான வெறுப்பையுமே மக்களிடம் கட்டமைக்கும் என்ற நிலை உருவாகியிருக்கிறது!

இந்திய தேர்தல் களத்தில் இது தான் இந்த வாரத்திற்கான கன்ஸாலிடேடட் அப்டேட்

தொடர்ந்து விவாதிப்போம் ஸ்டே டியூண்ட்!

# கடலூர் மேற்கு மாவட்டத்தில் திண்ணைப் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!

கடலூர் செப்டம்பர் 26.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலோடு கடலூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் இன்று (26.2.2024 - திங்கட்கிழமை) முதல் 27மற்றும் 28 ஆகிய மூன்று நாட்கள் காலை 8 மணி முதல் கடலூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் பாகம் வாரியாக இல்லம் “தோறும் ஸ்டாலின் குரல்” என்ற தலைப்பில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கும் வகையில் துண்டுப் பிரசுரங்களை வழங்கிட வேண்டுமென கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி. வெ. கணேசன் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கடலூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் இன்று (26.2. 2024 - திங்கள் கிழமை) 4 மணி அளவில் எனது தலைமையில் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி மங்களூர் ஒன்றியம் மலையனூரில் “இல்லந்தோறும் ஸ்டாலின் குரல்”என்றபிரச்சாரத்தை, தொடங்கி வைக்கிறேன்.

அது போன்று 26, 27, 28.ஆகிய மூன்று நாட்களும் திட்டக்குடி விருத்தாசலம் நெய்வேலி பண்ருட்டி ஆகிய தொகுதிக்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை வார்டு ஆகிய இடங்களில் திண்ணை பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என அந்தந்த ஒன்றிய நகர பேரூர் வார்டு கிளைக் கழக செயலாளர்களையும் நிர்வாகிகளையும் கேட்டுக்கொள்கிறேன்.

கழக அரசின் சாதனைகளை இல்லம் தோறும் எடுத்துரைக்கும் போது விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு மோட்டார் வழங்கியது, குடும்பத் தலைவிக்கு உரிமை தொகையாக மாதந்தோறும் ஆயிரம் வழங்கியது, மகளிர்க்கு நகரப் பேருந்துகளில் இலவச பயணத்திட்டம், மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம் 2 மாணவர்களை தனியார் துறையில் பணி அமர்த்தியது மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் திறன் அளித்தது, மாதம்தோறும் மாணவியர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கி புதுமைப்பெண் திட்டம், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம், தற்போது அறிவிக்கபட்டுள்ள 2024 -25 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் குடிசை இல்லா தமிழ் நாட்டை உருவாக்க 8 லட்சம் வீடுகள் கட்டி தரும் கலைஞரின் கனவு திட்டம் வறுமை இல்லா தமிழ் நாட்டை உருவாக்குவதற்காக 5 லட்சம் ஏழை குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் போன்ற எண்ணற்ற சாதனைகளை கழக அரசின் திராவிட மாடல் ஆட்சியினை பொதுமக்களிடம் திண்ணை பிரச்சாரமாக மேற்கொள்ள வேண்டும் என கடலூர் மேற்கு மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக கிளை கழக வார்டு கழக, செயலாளர் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோர் இந்த திண்ணைப் பிரச்சாரத்தில் முழுமையாக ஈடுபட்டு பொதுமக்களிடம் மிகவும் சிறப்பாக எடுத்துரைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!



கடலூர் மேற்கு மாவட்ட செயற்குழுக்கூட்டம் நாளை (27.02. 2024 செவ்வாய் கிழமை) காலை: 11 மணியளவில் காடாம்புலியூர் A.V. திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் டாகடர். கோ.நந்தகோபாலகிருஷ்ணன் . தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள்,இந்நாள் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு , பொதுகுழு உறுப்பினர்கள் ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தொ மு ச நிர்வாகிகள் திட்டக்குடி, விருத்தாசலம் , நெய்வேலி, பண்ருட்டி, சட்ட மன்ற தொகுதியின் வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் (BLA2) மற்றும் 10 வாக்குச்சாவடிக்கு ஒருவர் என நியமன செய்த ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கழக மூத்தமுன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. மார்ச் 01 கழக தலைவர், முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்த நாள் விழா.

2. நாடாளுமன்றத் தேர்தல் குறித்து,

3. கழக ஆக்கப்பணிகள்

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

### சென்னை வடகிழக்கு மாவட்டம்

# 2, 26, 31 ஆகிய வட்டங்களுக்கான வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மேற்கு பகுதி, 2வது வட்டச் செயலாளர் எம்.ஜெயசந்திரன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **டி. சேகர்** (18, முதல் தெரு, பெரியகுப்பம், எண்ணூர், சென்னை600 057) அவர்கள் 2வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

மாதவரம் தெற்கு பகுதி, 26வது வட்டச் செயலாளர் ஜி. துக்காராம் அவர்கள் பகுதிக் கழகச் செயலாளாக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருவதால், அவருக்குப் பதிலாக **எ.ராஜேஷ்** (9/15, கங்கையம்மன் கோயில் தெரு, மாதவரம், சென்னை 600 060.) அவர்கள் 26வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

மாதவரம் தெற்கு பகுதி, 31வது வட்டச் செயலாளர் பி.சுரேஷ் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, **ப.மகேஷ்,** (37, மதுரா மேட்டுப்பாளையம் தெரு, புழல், சைக்கிள் ஷாப், சென்னை 600 066) அவர்கள் 31வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.2.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு தலைமையில்

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!



சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை (27.2.2024- செவ்வாய்க்கிழமை) மாலை 3.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கலைஞர் அரங்கில் கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே. என்.நேரு தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட தொகுதிப் பார்வையாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் மாநில துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வாக்குசாவடி முகவர்கள் (BLA 2) மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்ககுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள்
நிதி நிலை அறிக்கை விளக்கக் கூட்டங்கள் .
நாடாளுமன்ற தேர்தல் பணிகள்.
கழக ஆக்கப்பணிகள்.

**எஸ்.ஆர்.சிவலிங்கம்**
செயலாளர்
சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க.